## இறுதிச் செபம்:

ஆண்டவரே, நீர் எங்களை இருளில் விட்டு செல்லவில்லை. மாறாக நீர் யார் என்றும், எங்களுக்காக நீர் அனைத்தையும் செய்துவருகின்றீர் என்பதையும் எங்களுக்கு உம்முடைய இறைவார்த்தையின் வழியாக வெளிப்படுத்தினீர். அதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்முடைய வார்த்தைகளின் வழியாக தெளிவையும், ஊக்கத்தையும் நம்பிக்கையையும் தந்தருள்வீராக!இவையாவும் உம்முடைய வல்லமையுள்ள பெயராலே மன்றாடுகின்றோம். ஆமென்.

அடிப்படை திருச்சபை சமூகத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களின் ஒவ்வொரு தேவைக்காகவும் அனைவரும் இணைந்து செபமாலையில் ஒரு பத்து மணி செபங்களை செபிப்போம்.

## முடிவு பாடல்:

இயேசுவே உந்தன் வார்த்தையால்
வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அன்புப் பாதையில்
கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால் - என்
உள்ளம் மலர்ந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே

1. தீமைகள் தகர்ந்தொழிந்திடும் உன்
வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுய நலங்களும் இங்கு
வீழ்ந்து ஒழிந்திடுமே
நீதியும் அன்பின் மேன்மையும்
பொங்கி நிறைந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே

2. நன்மையில் இனி நிலைபெறும் என்
சொல்லும் செயல்களுமே
நம்பிடும் மக்கள் அனைவரும்
ஒன்றாகும் நிலைவருமே
இன்றெழும் புது விந்தைகள்
உன்னைப் புகழ்ந்திடுதே
இயேசுவே என் தெய்வமே உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே





*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம் | ஜூலை 2020

# அதிசசிந்தனை

## நான் அவர்களை உலகிற்கு அனுப்பினேன்

**நோக்கம்:** உலகிற்கு குணமளிக்க அனுப்பப்படுதல் **நிகழ்வு:** விவிலிய ஞாயிறு
**சமூக ஊடக போக்கு:** தீமமேபக: அனைவருக்கும் விவிலியம்

**முன்னுரை:** ஜனவரி 26, 2020 – இறைவார்த்தை ஞாயிறு என்ற நாளை திருத்தந்தை, முதன் முதலாக புனித பேதுரு பேராலயத்தில் நிறைவேற்றப்பட்ட திருப்பலியில் இதனை அறிவித்தார். ஆண்டின் மூன்றாவது ஞாயிறை இறைவார்த்தை ஞாயிறாக ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்குமாறு ஏற்படுத்தினார். விவிலியத்தில் உள்ள இறைவார்த்தை நம்முடைய வாழ்க்கையை மாற்றக்கூடியது. நம் அன்றாட வாழ்க்கையை ஊக்கப்படுத்த, திருவிவிலியத்தை நம் அருகிலேயே வைத்துக்கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை உற்சாகப் படுத்துகின்றார். நம் வாழ்வில் இறைவார்த்தைக்கு ஒரு இடத்தை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் விவிலியத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு வசனத்தை வாசிக்க வேண்டும்; ஒவ்வொரு நாளையும் நற்செய்தியோடு தொடங்குவோம்; நம் மேசையில் அதைத் திறந்து வைப்போம்; நம் சட்டைப்பையில் அதை எடுத்துச் செல்வோம்; நம்முடைய கைப்பேசியிலிருந்து அதை வாசிப்போம்; நம் அன்றாட வாழ்வை ஊக்கப்படுத்த விவிலியத்தை நம் வாழ்வில் அனுமதிப்போம். ஆண்டவர் அவருடைய இறைவார்த்தை என்னும் அன்புக் கடிதத்தின் வழியாக அவருடைய வார்த்தைகளை நமக்குத் தந்து, அவர் நம் பக்கம் இருப்பதை உணரச்செய்கிறார். அவருடைய வார்த்தைகள் நமக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் தருகின்றது. அதே வேளையில் சுயநலமென்ற கட்டுகளிலிருந்து விடுபட்டு, மனமாற்றத்தை நோக்கிச் செல்லவும் நமக்கு சவால் விடுக்கின்றது.




Image: ©123rf.com

## தொடக்கச் செபம்:

ஆண்டவரே, உம்முடைய ஞானத்தைப் பெற வேண்டுமென்றால் அதை நாங்கள் கேட்டால் தான் கிடைக்குமென்று வாக்களித்துள்ளீர். ஆண்டவரே, உம்மோடு உரையாடவும், இன்றைய எங்களுடைய பகிர்வில் பகுத்தறிந்திடவும், ஞானத்தைத் தாரும். எங்களுடைய அறிவில் அல்ல; ஆண்டவரே, உம்முடைய ஞானத்தையே நாங்கள் நம்பியிருக்க உதவியருளும்.

## தொடக்கப் பாடல்:

ஆகட்டும் ஆண்டவரே, என்னில்
அருளுயிர்த் தந்திடும் அன்பரும் வார்த்தை
ஆகட்டும் ஆண்டவரே

1. வாழ்வைத் தந்திடும் வார்த்தை – அதன்
வழியாய் அமைந்திடும் வார்த்தை – 2
தேன்போல் இனித்திடும் வார்த்தை – 2
என்னைத் தேடியே வந்ததும் வார்த்தை

2. சிலுவை சுமந்திடும் வார்த்தை – தன்
செந்நீர் சிந்திடும் வார்த்தை – 2
சீரருள் பொங்கிடும் வார்த்தை – 2 நம்
சிந்தையைக் கவர்ந்திடும் வார்த்தை

3. சாந்தம் கொண்டதும் வார்த்தை – என்
சாவை அழித்ததும் வார்த்தை – 2
சொந்தம் கொள்வதும் வார்த்தை – 2
மனச்சோர்வை நீக்கிடும் வார்த்தை

## உரையாடல்:

### புனித அகுஸ்தினாரின் வாழ்வை மாற்றிய புத்தகம்:

புனித ஹிப்போ அகுஸ்தினார் அனைத்துப் புனிதர்களின் மத்தியில் மாபெரும் புனிதராக அறியப்படுபவர். அவருடைய போதிக்கும் திறமையினால் மட்டுமல்ல; அவர் எழுதிய பல புத்தகங்கள் குறிப்பாக, ஒப்புரவு மற்றும் கடவுளின் நகரம் போன்ற மாபெரும் இலக்கிய வரலாற்றுப் புத்தகங்களின் வழியாகவும், அவர் புனிதராக கருதப்படுகிறார். இருந்தபோதும், அவரைப் பற்றி மேலும் ஆராயும்போது, அவர் தம்முடைய இளமைக்காலத்தில் மிகவும் பாவ வாழ்க்கை வாழ்ந்தவர். சமயத்திற்குப் புறம்பாகவும் அவர் தத்துவ நூல்களை எழுதியவர். அவரின் தாயார் தொடர்ச்சியாக அவருக்காக இறைவனிடம் மன்றாடிக்கொண்டிருந்த காலத்திலும், திருமணம் செய்யாமலே, ஒரு குழந்தைக்கு தகப்பனானவர். இவ்வாறு இருந்தவரை எது மாற்றி, கடவுளிடம் திரும்பிக் கொண்டுவந்து சேர்த்தது?

அவருடைய “ஒப்புரவு” என்ற புத்தகத்தில் புனித அகுஸ்தினார் இவ்வாறு விளக்குகிறார். அவருடைய மனமாற்றம் உடனடியாக ஏற்படவில்லை. புனித அம்புரோஸ் அவர்களோடு ஏற்பட்ட நட்பின் காரணமாக கத்தோலிக்கத்திற்கு மாற தீவிரமான ஆவல் இருந்தபோதும், திருச்சபையின் போதனைகளைப் பின்பற்ற அவர் மிகவும் போராடினார். குறிப்பாக கற்பு நிறைந்த வாழ்க்கை வாழ பெரிதும் அவர் போராடினார். ஆனால் அவரால் முடியவில்லை. கற்பு நிறை வாழ்க்கை வாழ கடவுளிடம் உதவியைக் கேட்டுப் போராடினார் என்று அவர் தம் நூலில் குறிப்பிடுகிறார். ஒரு நாள், அவர் கடவுளிடம், தம் உள்ளத்தை முழுமையாக மாற்றும்படி மன்றாடினார். கத்தோலிக்கராக மாறவும், முழுமையாக திருச்சபையின் போதனைகளைக் கடைப்பிடிக்கவும் உதவி கேட்டு மன்றாடினார். சிற்றின்ப ஆசையை விட்டு விலகுவது அவ்வளவு எளிதல்ல என்று நினைத்தார்.

ஒரு நாள் அவர் தோட்டத்தில் ஆழ்ந்த தியானத்தில் இருந்தபோது, ஒரு குழந்தையின் குரல், “எடுத்து வாசி” என்று கூறுவதைக் கேட்டார். அவர் தம்மோடு கொண்டு வந்திருந்த திருவிவிலியத்தை உடனே எடுத்து திறந்தார். அவர் விவிலியத்தைத் திறந்தபோது, புனித பவுல் உரோமையருக்கு எழுதிய கடிதம் 13:13-14 வசனத்தை வாசித்தார். “தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம்” என்ற வார்த்தைகளை வாசித்தவுடன், தம்முடைய வாழ்க்கையை மாற்றிக்கொள்ள நேரம் வந்துவிட்டது என்று உணர்ந்தார்.

நாம் அனைவரும் மனமாற்றத்திற்காக அழைக்கப்படுகின்றோம். ஆனால் நம்மில் பலருக்கு அது எளிதானது அல்ல; இருந்தபோதும், புனித அகுஸ்தினாரின் வாழ்க்கையிலிருந்தும், விவிலியம் மற்றும் திருச்சபையின் புனித நூல்களின் வழியாகவும் நம்மால் கற்றுக்கொள்ள முடியும். அலைந்துகொண்டிருக்கும் நம் உள்ளத்தோடு பேசவும், அவரை நோக்கிச் செல்வதற்கு இறைவனே நமக்கு ஒரு சாலை வரைபடத்தையும் வழங்குகிறார்.

### கலந்துரையாடுவோம்

- உங்களுக்குப் பிடித்தமான இறைவசனம் உள்ளதா? ஆம் என்றால் எது என்ன? இந்த இறைவசனம் உங்கள் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியது?
- உங்கள் வாழ்க்கையில் உங்களை ஆழமாகத் தொட்ட இறைவார்த்தை, அல்லது மிகவும் கடினமான சூழ் நிலையை எதிர்கொள்ள உங்களுக்கோ அல்லது பிறருக்கோ உதவியாக இருந்த இறைவார்த்தையைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளவும்.

## இறைவார்த்தை:

### கொலோசையர்:3:16-17 .

கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடிகொள்வதாக! முழு ஞானத்தோடு ஒருவருக்கு ஒருவர் கற்பித்து அறிவுரை கூறுங்கள். திருப்பாடல்களையும் புகழ்ப்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடிக் கடவுளைப் போற்றுங்கள். எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

### சிந்தனை:

- வாசகத்தைச் சத்தமாக வாசித்து திறந்த மனத்தோடு கேட்கவும்.
- வார்த்தையோ வசனமோ உங்கள் மனதைத் தொடும் வரை மௌனமாக இதை வாசிக்கவும்.
- அந்த வார்த்தை அல்லது வசனம் வழி உங்களுக்கு தூய ஆவியார் சொல்வது என்ன?
- ஆண்டவரின் குரலுக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?
- சிறிய குழுக்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் (3-4 பேர்)

### செயல்:

- வருகின்ற மாதத்தில் ஒரு நற்செய்தியை முழுவதுமாக வாசித்து முடிக்க திட்டமிடுங்கள். எந்த நற்செய்தியை வாசிக்கப்போகின்றீர்கள்? ஏன் அதில் ஆர்வமுள்ளது என்ற காரணத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். நற்செய்தியை வாசிக்கும்போது, அதில் உள்ள காட்சிகள், சொற்றொடர்கள், போதனைகள் மற்றும் வேறு கருத்துகளை ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டு வையுங்கள். இவ்வாறு செய்யும்போது, மிகவும் பயனுள்ள வகையில் கடவுள் உங்களில் செயலாற்றுவதை, உங்களால் உணரமுடியும்.

- அடிப்படை திருச்சபை சமூகமாக, வேறு எந்தமாதிரியான வழிகளில் திருவிவிலியத்தை வாசித்து, தியானித்து, பகிர்ந்துகொள்ள முடியும்? இதற்காக இணையத்தின்வழி வேறு ஏதேனும் புதிய வழிகள் உள்ளதா? குறைந்தது இரண்டு வழிகளையாவது கண்டுபிடித்து, அதை ஒருவர் மற்றவரோடு செயல்படுத்த முயற்சி செய்யுங்கள்.

**2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்: மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்**
ஜூலை 2020

| | |
|---|---|
| **மாதாந்திர கருப்பொருள்:** | **நான் அவர்களை உலகிற்கு அனுப்பினேன்** |
| **நோக்கம்:** | **உலகிற்கு குணமளிக்க அனுப்பப்படுதல்** |
| **நிகழ்வு:** | **விவிலிய ஞாயிறு** |
| **சமூக ஊடக போக்கு:** | **தீமமேபக: அனைவருக்கும் விவிலியம்** |

**அறிமுகம்:**

ஜனவரி 26, 2020 இறைவார்த்தை ஞாயிறு என்ற நாளை திருத்தந்தை, முதன் முதலாக புனித பேதுரு பேராலயத்தில் நிறைவேற்றப்பட்ட திருப்பலியில் இதனை அறிவித்தார். ஆண்டின் மூன்றாவது ஞாயிறை இறைவார்த்தை ஞாயிறாக ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்குமாறு ஏற்படுத்தினார். விவிலியத்தில் உள்ள இறைவார்த்தை நம்முடைய வாழ்க்கையை மாற்றக்கூடியது. நம் அன்றாட வாழ்க்கையை ஊக்கப்படுத்த, திருவிவிலியத்தை நம் அருகிலேயே வைத்துக்கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை உற்சாகப் படுத்துகின்றார். நம் வாழ்வில் இறைவார்த்தைக்கு ஒரு இடத்தை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் விவிலியத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு வசனத்தை வாசிக்க வேண்டும்; ஒவ்வொரு நாளையும் நற்செய்தியோடு தொடங்குவோம்; நம் மேசையில் அதைத் திறந்து வைப்போம்; நம் சட்டைப்பையில் அதை எடுத்துச் செல்வோம்; நம்முடைய கைப்பேசியிலிருந்து அதை வாசிப்போம்; நம் அன்றாட வாழ்வை ஊக்கப்படுத்த விவிலியத்தை நம் வாழ்வில் அனுமதிப்போம். ஆண்டவர் அவருடைய இறைவார்த்தை என்னும் அன்புக் கடிதத்தின் வழியாக அவருடைய வார்த்தைகளை நமக்குத் தந்து, அவர் நம் பக்கம் இருப்பதை உணரச்செய்கிறார். அவருடைய வார்த்தைகள் நமக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் தருகின்றது. அதே வேளையில் சுயநலமென்ற கட்டுகளிலிருந்து விடுபட்டு, மனமாற்றத்தை நோக்கிச் செல்லவும் நமக்கு சவால் விடுக்கின்றது.

**தொடக்க செபம்:**

ஆண்டவரே, உம்முடைய ஞானத்தைப் பெற வேண்டுமென்றால் அதை நாங்கள் கேட்டால் தான் கிடைக்குமென்று வாக்களித்துள்ளீர். ஆண்டவரே, உம்மோடு உரையாடவும், இன்றைய எங்களுடைய பகிர்வில் பகுத்தறிந்திடவும், ஞானத்தைத் தாரும். எங்களுடைய அறிவில் அல்ல; ஆண்டவரே, உம்முடைய ஞானத்தையே நாங்கள் நம்பியிருக்க உதவியருளும்.

**தொடக்கப் பாடல்:**

ஆகட்டும் ஆண்டவரே, என்னில்
அருளுயிர்த் தந்திடும் அன்பரும் வார்த்தை
ஆகட்டும் ஆண்டவரே

1. வாழ்வைத் தந்திடும் வார்த்தை - அதன்
வழியாய் அமைந்திடும் வார்த்தை - 2
தேன்போல் இனித்திடும் வார்த்தை - 2
என்னைத் தேடியே வந்ததும் வார்த்தை

2. சிலுவை சுமந்திடும் வார்த்தை - தன்
செந்நீர் சிந்திடும் வார்த்தை - 2
சீரருள் பொங்கிடும் வார்த்தை - 2 நம்
சிந்தையைக் கவர்ந்திடும் வார்த்தை

3. சாந்தம் கொண்டதும் வார்த்தை - என்
சாவை அழித்ததும் வார்த்தை - 2
சொந்தம் கொள்வதும் வார்த்தை - 2
மனச்சோர்வை நீக்கிடும் வார்த்தை

**உரையாடல்:**

புனித அகுஸ்தினாரின் வாழ்வை மாற்றிய புத்தகம்:

புனித ஹிப்போ அகுஸ்தினார் அனைத்துப் புனிதர்களின் மத்தியில் மாபெரும் புனிதராக அறியப்படுபவர். அவருடைய போதிக்கும் திறமையினால் மட்டுமல்ல; அவர் எழுதிய பல புத்தகங்கள் குறிப்பாக, *ஒப்புர*வு மற்றும் *கடவுளின் நகரம்* போன்ற மாபெரும் இலக்கிய வரலாற்றுப் புத்தகங்களின் வழியாகவும், அவர் புனிதராக கருதப்படுகிறார். இருந்தபோதும், அவரைப் பற்றி மேலும் ஆராயும்போது, அவர் தம்முடைய இளமைக்காலத்தில் மிகவும் பாவ வாழ்க்கை வாழ்ந்தவர். சமயத்திற்குப் புறம்பாகவும் அவர் தத்துவ நூல்களை எழுதியவர். அவரின் தாயார் தொடர்ச்சியாக அவருக்காக இறைவனிடம் மன்றாடிக்கொண்டிருந்த காலத்திலும், திருமணம் செய்யாலே, ஒரு குழந்தைக்கு தகப்பானானவர். இவ்வாறு இருந்தவரை எது மாற்றி, கடவுளிடம் திரும்பிக் கொண்டுவந்து சேர்த்தது?

அவருடைய "ஒப்புரவு" என்ற புத்தகத்தில் புனித அகுஸ்தினார் இவ்வாறு விளக்குகிறார். அவருடைய மனமாற்றம் உடனடியாக ஏற்படவில்லை. புனித அம்புரோஸ் அவர்களோடு ஏற்பட்ட நட்பின் காரணமாக கத்தோலிக்கத்திற்கு மாற தீவிரமான ஆவல் இருந்தபோதும், திருச்சபையின் போதனைகளைப் பின்பற்ற அவர் மிகவும் போராடினார். குறிப்பாக கற்பு நிறைந்த வாழ்க்கை வாழ பெரிதும் அவர் போராடினார். ஆனால் அவரால் முடியவில்லை. கற்பு நிறை வாழ்க்கை வாழ கடவுளிடம் உதவியைக் கேட்டுப் போராடினார் என்று அவர் தம் நூலில் குறிப்பிடுகிறார். ஒரு நாள், அவர் கடவுளிடம், தம் உள்ளத்தை முழுமையாக மாற்றும்படி மன்றாடினார். கத்தோலிக்கராக மாறவும், முழுமையாக திருச்சபையின் போதனைகளைக் கடைப்பிடிக்கவும் உதவி கேட்டு மன்றாடினார். சிற்றின்ப ஆசையை விட்டு விலகுவது அவ்வளவு எளிதல்ல என்று நினைத்தார்.

ஒரு நாள் அவர் தோட்டத்தில் ஆழ்ந்த தியானத்தில் இருந்தபோது, ஒரு குழந்தையின் குரல், "எடுத்து வாசி" என்று கூறுவதைக் கேட்டார். அவர் தம்மோடு கொண்டு வந்திருந்த திருவிவிலியத்தை உடனே எடுத்து திறந்தார். அவர் விவிலியத்தைத் திறந்தபோது, புனித பவுல் உரோமையருக்கு எழுதிய கடிதம் 13:13-14 வசனத்தை வாசித்தார். "தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம்" என்ற வார்த்தைகளை வாசித்தவுடன், தம்முடைய வாழ்க்கையை மாற்றிக்கொள்ள நேரம் வந்துவிட்டது என்று உணர்ந்தார்.

நாம் அனைவரும் மனமாற்றத்திற்காக அழைக்கப்படுகின்றோம். ஆனால் நம்மில் பலருக்கு அது எளிதானது அல்ல; இருந்தபோதும், புனித அகுஸ்தினாரின் வாழ்க்கையிலிருந்தும், விவிலியம் மற்றும் திருச்சபையின் புனித நூல்களின் வழியாகவும் நம்மால் கற்றுக்கொள்ள முடியும்.
அலைந்துகொண்டிருக்கும் நம் உள்ளத்தோடு பேசவும், அவரை நோக்கிச் செல்வதற்கு இறைவனே நமக்கு ஒரு சாலை வரைபடத்தையும் வழங்குகிறார்.

**இந்த மாதம் நம் உள்ளத்தில் ரீங்காரமிடும் கருத்துகள்:**

- உங்களுக்குப் பிடித்தமான இறைவசனம் உள்ளதா? ஆம் என்றால் எது என்ன? இந்த இறைவசனம் உங்கள் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியது?
- உங்கள் வாழ்க்கையில் உங்களை ஆழமாகத் தொட்ட இறைவார்த்தை, அல்லது மிகவும் கடினமான சூழ் நிலையை எதிர்கொள்ள உங்களுக்கோ அல்லது பிறருக்கோ உதவியாக இருந்த இறைவார்த்தையைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளவும்.

**தேர்ந்து தெளிதல்:**

கொலோசையர்:3:16-17 “கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடிகொள்வதாக! முழு ஞானத்தோடு ஒருவருக்கு ஒருவர் கற்பித்து அறிவுரை கூறுங்கள். திருப்பாடல்களையும் புகழ்ப்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடிக் கடவுளைப் போற்றுங்கள். எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்”.

**சிந்தனைக்கு:**

- இறைவார்த்தையை சத்தமாக வாசித்து, திறந்த மனதோடு செவிமடுப்போம்
- வார்த்தையோ, சொற்றொடரோ உங்கள் உள்ளத்தைத் தொடும்வரை மீண்டும் ஒரு முறை அமைதியில் வாசிக்கவும்.
- உங்கள் உள்ளத்தைத் தொட்ட வார்த்தை/சொற்றொடரை சத்தமாக கூறவும்
- ஏன் அந்த வார்த்தை உங்கள் உள்ளத்தைத் தொட்டது என்று பகிர்ந்துகொள்ளவும்.

குழுவில் பகிர்ந்துகொண்ட வார்த்தைகளில் இருந்து "வாழ்வு தரும் வார்த்தையை" ஒருமனதாக தேர்ந்தெடுத்து, அந்த வார்த்தையை அந்த மாதம் முழுவதும் தியானிக்கவும்.

**செயல் நடவடிக்கை:**

- வருகின்ற மாதத்தில் ஒரு நற்செய்தியை முழுவதுமாக வாசித்து முடிக்க திட்டமிடுங்கள். எந்த நற்செய்தியை வாசிக்கப்போகின்றீர்கள்? ஏன் அதில் ஆர்வமுள்ளது என்ற காரணத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். நற்செய்தியை வாசிக்கும்போது, அதில் உள்ள காட்சிகள், சொற்றொடர்கள், போதனைகள் மற்றும் வேறு கருத்துகளை ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டு வையுங்கள். இவ்வாறு செய்யும்போது, மிகவும் பயனுள்ள வகையில் கடவுள் உங்களில் செயலாற்றுவதை, உங்களால் உணரமுடியும்.
- அடிப்படை திருச்சபை சமூகமாக, வேறு எந்தமாதிரியான வழிகளில் திருவிவிலியத்தை வாசித்து, தியானித்து, பகிர்ந்துகொள்ள முடியும்? இதற்காக இணையத்தின்வழி வேறு ஏதேனும் புதிய வழிகள் உள்ளதா? குறைந்தது இரண்டு வழிகளையாவது கண்டுபிடித்து, அதை ஒருவர் மற்றவரோடு செயல்படுத்த முயற்சி செய்யுங்கள்.

**நிறைவு செபம்:**

ஆண்டவரே, நீர் எங்களை இருளில் விட்டு செல்லவில்லை. மாறாக நீர் யார் என்றும், எங்களுக்காக நீர் அனைத்தையும் செய்துவருகின்றீர் என்பதையும் எங்களுக்கு உம்முடைய இறைவார்த்தையின் வழியாக வெளிப்படுத்தினீர். அதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்முடைய வார்த்தைகளின் வழியாக தெளிவையும், ஊக்கத்தையும் நம்பிக்கையையும் தந்தருள்வீராக!இவையாவும் உம்முடைய வல்லமையுள்ள பெயராலே மன்றாடுகின்றோம். ஆமென்.

அடிப்படை திருச்சபை சமூகத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களின் ஒவ்வொரு தேவைக்காகவும் அனைவரும் இணைந்து செபமாலையில் ஒரு பத்து மணி செபங்களை செபிப்போம்.

**முடிவுபாடல்:**
இயேசுவே உந்தன் வார்த்தையால்
வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அன்புப் பாதையில்
கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால் - என்
உள்ளம் மலர்ந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே

1. தீமைகள் தகர்ந்தொழிந்திடும் உன்
வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுய நலங்களும் இங்கு
வீழ்ந்து ஒழிந்திடுமே
நீதியும் அன்பின் மேன்மையும்
பொங்கி நிறைந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே

2. நன்மையில் இனி நிலைபெறும் என்
சொல்லும் செயல்களுமே
நம்பிடும் மக்கள் அனைவரும்
ஒன்றாகும் நிலைவருமே
இன்றெழும் புது விந்தைகள்
உன்னைப் புகழ்ந்திடுதே
இயேசுவே என் தெய்வமே உன்
வார்த்தை ஒளிர்ந்திடுமே

Yearly theme: Sent with Joy to Heal

July theme: I have sent them into the world

Focus: Sent to the world to heal

Event: Bible Sunday

Social Media Trend: pmptbible4all

Introduction

On 26 January 2020, Pope Francis inaugurated the first Sunday of the Word of God, with Mass in St. Peter's Basilica. The Pope established the Sunday of the Word of God, to take place annually throughout the world on the third Sunday of Ordinary Time.Pope Francis preached about the life-changing power of God's word in Scripture, encouraging everyone to keep a Bible close for daily inspiration. He said, "Let us make room in our lives for the word of God. Each day, let us read a verse or two of the Bible. Let us begin with the Gospel: let us keep it open on our table, carry it in our pocket, read it on our cell phones, and allow it to inspire us daily. The Lord gives you his word, so that you can receive it like a love letter he has written to you, to help you realize that he is at your side. His word consoles and encourages us. At the same time, it challenges us, frees us from the bondage of our selfishness and summons us to conversion."

**Opening Prayer**

Lord, you promise us that we only have to ask for wisdom to receive it. Lord, please give us your wisdom now as we prepare ourselves to dialogue, discern and to act on what we discuss today. Help us not rely on our own understanding, but in your wisdom. Amen.

**Opening Hymn**

Chorus: O the Word of my Lord,
Deep within my being.
Oh the Word of my Lord,
You have filled my mind.

Before I formed you in the womb, I knew you through and through
I chose you to be mine before you left your mother's side
I called to you my child to be my sign.
I know that you are very young, but I will make you strong
I will fill you with my word, and you will travel through the land
Fulfilling my command, which you have learned.

And everywhere you are to go,
My hand will follow you
You will not be alone,
In all the danger that you fear
You'll find me very near, Your words my own.

**Dialogue:**

**The Book that Changed St. Augustine's Life**

St. Augustine of Hippo is now known as one of the greatest saints of all time. Not only was he a very holy bishop with a gift for preaching, but he also wrote many books, such as *Confessions* and *The City of God*, which are widely considered to be classics of Western literary history. However, if you have done any research into St. Augustine, you know that he lived very sinfully in his youth. He subscribed to pagan philosophies and despite his mother's fervent pleas for repentance, he continued to live with a woman out of wedlock, eventually fathering a child with her.So, what led to Augustine's conversion and made him return to God?

The answer: The Holy Bible.

In his book, *Confessions*, St. Augustine explains that his conversion was not instant. Though he had a strong desire to become a Catholic after befriending St. Ambrose, he struggled to practice some of the Church's teachings, especially that of chastity. He wrote that he asked God "to make him chaste, but not yet."One day, Augustine pleaded with God to fully convert his heart. He wanted to become a Catholic and fully embrace the Church's teachings, but he felt it impossible to detach himself from sins of the flesh.

Augustine then retreated to a garden to spend time in deep contemplation. There, he heard a child's voice imploring him to "pick up and read" the copy of Sacred Scripture he had brought into the garden with him. Immediately, Augustine opened the book to St. Paul's Letter to the Romans, 13:13-14, which states that

one must “make no provision for the desires of the flesh.” It was after reading those words that Augustine knew it was time to change his life.

We are all called to conversion of heart, and for most of us it is not easy. However, what we can learn from St. Augustine’s story isthat through the Holy Scriptures, God speaks to our restless hearts and offers us a road map to bring us home to Him.

**Buzz this month** :

- Do you have a favorite scripture verse? If so, what is it, and how has this verse impacted your life?
- Share a personal story or an incident where the Holy Scriptures touched your life deeply or helped you or others overcome a difficult situation.

**Discernment:**

Colossians 3:16; “Let the word of Christ dwell in you richly in all wisdom, teaching and admonishing one another in psalms and hymns and spiritual songs, singing with grace in your hearts to the Lord. And whatever you do in word or deed, do all in the name of the Lord Jesus, giving thanks to God the Father through Him.

**Reflection:**

- We read the text for the first time.
- We read the text again in silence, and we listen intently to the word that the Lord wants to speak to us in our hearts.
- Each of us share aloud the word/phrase that touched us.
- We share why the word/phrase has touched us.

Together, we choose a “word of life” which the group may reflect on for the coming month

**Deeds**:

- Commit yourself to readingat least one of the Gospels from start to finish in the coming month. Share with others which Gospel you would be interested to read and the reasons why it interests you.As you read through the gospel of your choice, take note of any scenes, phrases or teachings that inspire you or strike you in any way. You are encouraged to journal about how these verses are significant to you, and to allow God to speak through this process.
- In what way could we dedicate ourselves to spending more time in reading, reflecting and discussing the Holy Scriptures as a BEC? What online tools can we use for this purpose? Think of at least 2 different methods of the above, and share your ideas with one another.

**Closing Prayer**

“Lord, thank you that you don’t leave us in the dark about who you are and what you are doing in the world, but that you have revealed yourself and your will through the Bible, your sacred words to us. Thank you for the clarity, encouragement and hope your Word brings. In Jesus’ Name I pray, Amen.”

- Pray a decade of the Rosary for the needs of the families in the BEC.